அசல் வழக்கு எண்.87/2014 தேதி 03.04.2024

வா.சா.3 - சக்திவேல்

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதி தாவா வழக்கை யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் ராமசாமிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். 30.08.1987 ம் தேதி நல்லப்ப ரெட்டியார் அவரது மனைவி தும்மாயி அம்மாளுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. கேள்வி பட்டுள்ளேன். மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சிகள் யார் என்று எனக்கு தெரியாது. 04.01.1988 ம் தேதி நல்லப்ப ரெட்டியார் மற்றும் தும்மாயி அம்மாள் ஆகியோர் வெள்ளையம்மாளுக்கு தாவா சொத்தை உயில் ஆவணம் எழுதி வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. சொல்வி கேள்வி பட்டேன்.

2. மேற்படி இரண்டு உயில் ஆவணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் உயில் ஆவணத்தை இரத்து செய்துவிட்டு இரண்டாவது உயில் ஆவணம் எழுதினார்களா என்று எனக்கு தெரியாது. நல்லப்ப ரெட்டியார் மற்றும் தும்மாயி அம்மாள் எப்போது இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தில் கண்ட சொத்தை வாதி வெள்ளையம்மாள் அனுபவம் செய்து வரும் விவரம் எனக்கு நேரடியாக தெரியும். மேற்படி சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. வெள்ளையம்மாள் எனது பக்கத்து வீட்டுகாரர். வெள்ளையம்மாள் எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Principal District Munsif,**
**Kulithalai.**